PHONE No. 55630

REGD. No. M. [illegible]

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 150

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு :
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை : கார்த்திகை 20உ சனி (5—12—53) ☆ ★ ☆ வெளியூர் : கார்த்திகை 21உ ஞாயிறு (6—12—53)

'எங்களை வரவேற்பதில் வட இந்தியக் கலைஞர்களுக்கு ஆர்வம் இல்லை'

நாயனக்காரர்களுக்கு சோறுபோட்டு கிழமைக்கு ரூ. 2 சம்பளமாம்!

பாவைக் கூத்து பயில எவரும் முன் வருவதில்லையாம்!

தெற்கு-வடக்கு உறவு உண்டாக்குவது கே. சுப்பிரமணிய அய்யர் ஆசையாம்!

"கலைத் துறை பலவற்றிலும் பயிற்சி பெற்றுள்ள தென்னிந்தியக் கலைஞர்கள், இங்குள்ள தென்னிந்திய மக்களின் அழைப்புக் கிணங்கியே, ஒவ்வொரு சமயமும் இங்கு வரவேண்டியதாக இருக்கிறது. இது வருந்தக்கூடிய விஷயம். வடஇந்தியக் கலைஞர்களை வரவேற்பதில், தென்னிந்தியக் கலைஞர்கள் உற்சாகம் கொள்வதுபோல், எங்களை வரவேற்பதில் வட இந்தியக் கலைஞர்கள் ஆர்வங் காட்டுவது கிடையாது."

—இவ்வாறு, டெல்லி சென்றுள்ள தென்னிந்தியக் கலைஞர்களின் குழுவில் சிறந்து விளங்கும் நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணா அவர்கள் நிருபர்களிடம் கூறினார்.

"கலாசார மறுமலர்ச்சி பற்றி ஆர்வமுடன் பேசிய கலைஞர்கள், வருமானமின்றி வறுமைக்குள்ளாகித் தவிக்கின்றனர். நாதசுர வித்வான்கள் ஒவ்வொரு இடங்களில் வாரம் இரண்டு ரூபாய் சம்பளத்திற்கும், சாப்பாட்டிற்கும் தொழில் புரிகின்றனர்" என்று, திருவெண்காடு சுப்ரமணியம் குறிப்பிட்டார்.

தஞ்சையிலிருந்து வந்திருந்த ஒருவர், பாவைக் கூத்தின் அவசியத்தை விளக்கி, தனக்குச் சீடர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறதென்றும, பாவைக் கூத்துக்காரர்கள் அனைவரும் 'பாப்பர்'கள் என்றும் கூறினார்.

"வட நாடு — தென் நாடு இவை இரண்டுக்குமிடையே நல்லுறவை வளர்க்கவே நாங்கள் வந்திருக்கிறோம்," என்று, கே. சுப்ரமணியம் குறிப்பிட்டார்:

இங்கு நடைபெறும் கலாசார மகாநாட்டிற்கு வந்துள்ள தென்னாட்டு கலைஞர் குழுவில் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன், கே. சுப்பிரமணியம், லலிதா-பத்மினி-ராகினி, திருவெண்காடு சுப்பிரமணியம் குழுவினர், டி. கே. எஸ் சகோதரர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கிறார்கள். இவ்விழா 5 நாட்களுக்கு நடைபெறும்.

திருச்சிக்கருகே நால்வர் பலி

திருச்சி, டிச. 4—

திருச்சிக்கு அருகே பூங்குடிக்கும் புதூருக்கும் இடையில் ஜனதா எக்ஸ்பிரஸ் ரெயில் வண்டிக்கடியில் சிக்கி நால்வர் மடிந்தனர்.

இந்த நான்கு பேர்களும், தென்மாவட்டங்களிலிருந்து வேலை தேடிவந்தவர்களெனச் சொல்லப்படுகிறது

இதுபோலவே திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் மதுரை அருகில் ஒருவரை அடித்துக் கொன்றது

போபால், டிச 4—

இங்கரில், நகரப் போலீசார் பை அடிக்கும் 'சிறுர் கும்பலை'ச் சேர்ந்த மூன்று சிறுவர்களைப் பிடித்தனர். அவர்களில் 7 வயது சிறுவனும் இருந்தான். அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனின் வயது 14 தானும். அவனைப் போலீசார் தேடி வருகின்றனர்.

நெல்லை கலெக்டர் 'காரை' பட்டினி படை மறித்தது!

— (i) —

காரை விட்டிறங்கி கால் நடையாகச் சென்றார்

கஞ்சித் தொட்டி திறப்புக் கோரிக்கையாளர் கைது செய்யப்பட்டனர்

எட்டயபுரம், டிச 3—

நெல்லை மாவட்ட கலெக்டர் கே. கோபாலமேனன் ஐ சி எஸ். தலைமையில் கிராம நல இலாகா கூட்டம் குருவி குளத்தில் நடைபெற்றது கிராம நல இலாகா அதிபர் எஸ் பழனிச்சாமி செப்ற மாதத்தில் நடைபெற்ற வேலைபற்றி அறிக்கை சமர்ப்பித்தார்.

பள்ளிக்கூட தனிக்கை அதிகாரி கே. காமேஸ்வரய்யர் அறிக்கையில், ஆவல நாயகர் பட்டி—மதுராபுரிசாலை, புளியம்பட்டி சங்கரன் கோயில் இணைப்புச் சாலை வேலையில் மாணவர்கள் பங்கெடுத்துக் கொண்டதாக அறிவித்தார்.

கூட்டத்தொடக்கத்தில் குளத்துப்பட்டா குறிச்சி விவசாயிகள், அத்திப்பட்டி, ஆய்வாபுலப்பட்டி சேவகர்கள் ஆகியோர் ஊர்வலமாக வந்து கலெக்டரை பேட்டிகண்டு, கஞ்சித்தொட்டி பற்றிய மனுவை, சமர்ப்பித்தார்கள்.

கூட்டம் முடிந்து கலெக்டர் திரும்புகையில கோரிக்கையை உடனடியாக பூர்த்தி செய்வதாக வாக்களிக்க வேண்டுமென்று சேவகர்கள் கலெக்டரிடம் கேட்டார்கள். கலெக்டர், தன் அதிகாரத்திற்குட்பட்ட வேலைகளைச் செய்வதாகவும், காரை மறிக்க வேண்டாமென்றும் சொன்னார். சேவகர்கள் கேட்கவில்லை. உடனே கலெக்டர் தன் காரை அங்கேயே நிறுத்திவிட்டு கால்நடையாக சிறிதுதூரம் வந்து வேறு காரில் பயணமானார்.

மதுரான கோவில்பட்டி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சிறு படையுடன் வந்து, கலெக்டர் கார்முன் மறியல் செய்தவர்களை கைது செய்து சென்றார்.

ஆச்சாரியாருக்கு ஏற்ற பீடம்!

செங்கற்பட்டு, டிச. 2—

செங்கற்பட்டு தாலுகா அர்ச்சகர்கள் கூட்டம், திருக்கழுக்குன்றத்தில் நடைபெற்றது.

அப்போது தெய்வபக்தியுள்ளவர்களே மடாலய இலாகாவின் வேலைக்கு அமர்த்த வேண்டுமென்றும், விருத்தாசலத்தில் நடக்கவிருக்கும் அர்ச்சகர்கள் மாநில மகாநாட்டிற்கு சென்னை முதலமைச்சர் ஆச்சாரியாரையே அழைப்பதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நாகர் நாடு கோரிக்கை கேட்டு அஸ்ஸாம் முதல் அமைச்சர் அங்கலாய்க்கிறார்!

நாகருக்கு நலம் பயக்காது என வலை வீச்சு!

கோரிக்கையை கறைபடுத்த அந்நியப் பாதிரிகள் மீது பழி!

கௌஹாத்தி, டிச. 3—

மாநில மொழிகளின் புனிதத்தையும், தனிச் சிறப்பையும், வளர்ச்சியையும் கெடுத்து ஒழித்துக் கட்டுவதற்காக 'தேவ நாகரி' எழுத்துக்களை எல்லா மொழிகளுக்கும் பயன்படுத்தவேண்டும் என்று முடிவுகட்டிய லக்னோ மாநாட்டிற்கு சென்று திரும்பிய அஸ்ஸாம் முதல் அமைச்சர் விஷ்ணுராம மேதி, நாகரின் தனிநாடு கோரிக்கையைக் கேள்விப்பட்டதும், 'அது பொருந்தாதது—பொய்யானது—பொருளற்றது' என்று குறிப்பிட்டார்.

"நாகர்களின் 'தனி நாடு' கோரிக்கை மிஷனரிகள் மூலமாக வெளியுள்ள சில நாகர் தலைவர்களின் கோரிக்கையாக இருக்குமென்று நான் நினைக்கவில்லை இந்தியாவிலிருந்து அவர்களை பிரித்து வைத்திருக்க வேண்டும் என்ற நினைப்பில் சில சுயநல நோக்குடைய அன்னிய நாட்டுப் பாதிரிகளின் சேட்டையாகவே இருக்கக்கூடும் என்று கருதுகிறேன். இந்திய அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்னரேகூட, அன்னியப் பாதிரிகளின் மாய வலையில் சிக்கிக் கிடந்த சில நாகர் தலைவர்களிடம் இந்தச் சுதந்திரக் கோரிக்கைகளுக்குத் தூபமிடப்பட்டதற்கு, பிரிட்டிஷ் நிர்வாகிகளும் பொறுப்பானவர்களாவர். இந்தச் சுதந்திரக் கோரிக்கை நாகர்களின் நலத்துக்கு உகந்ததல்ல என்றும், பொருளற்றது, பொய்யானது என்றும் எச்சரித்திருக்கிறேன்."

பலாத்காரச் செயல்களைத் தூண்டுவதும், இந்தியர்களுக்கு எதிராக ஆவேசமூட்டுவதும் கடுமையான நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படும் என்று அமைச்சர் எச்சரித்துவிட்டு, மற்ற மலைஜாதியினரிடம் சர்க்கார் காட்டி வருவது போன்றே நாகர்களிடமும் சர்க்கார் அக்கறை கொள்ளுமென்றும், கல்வி போதனை, போக்குவரத்து வசதியை சர்க்கார் செய்து கொடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாகர்களின் தனி நாடு கோரிக்கையைத் தங்களுடைய 'அரசியல் கட்சி விளையாட்டு அரங்காக' ஆக்கிக் கொள்ள, அரசியல் கட்சிகள் முயலக் கூடாது என்றும், அமைச்சர் எச்சரித்தார்.

அஸ்ஸாம் வந்துள்ள நாகர் தேசியக் குழுவினருக்கும், உரிமை வேட்டையை விட்டுவிடுமாறு வற்புறுத்தினர்.

அஸ்ஸாமில பலபகுதிகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்து, தங்களது கோரிக்கைக்கு பலம் தேடி வருகிறது நாகர் தேசிய குழு. அக்குழு, இந்திய அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

காஷ்மீர் போன்ற அரசியல் நிலைகூட நாகர்களைத் திருப்தி செய்யாது என்றும், முழு ஆட்சி உரிமை கொண்ட தனி நாடு நிலைதான் நாகர் மக்கள் என்றும் அவர்களுடைய நிலைப்பாடு இந்தியாவுடன் ஒன்றுபட்டு இருப்பது அல்ல என்றும், அந்த நாகர் தேசியக்குழு வலியுறுத்தி வருகிறது.

காந்தியார் சிலையை அண்ணாதுரை திறக்க கோரிக்கை

★

வேலூர் நகரசபையின் முடிவு

வேலூர், டிச. 4—

வேலூர் 'ராஜாஜி பூங்கா'வில், காந்தி சிலையைத் திறந்து வைக்க தி. மு கழக பொதுச் செயலாளர் அண்ணாதுரையை அழைப்பதென்றும, அவருக்கு வரவேற்பும் பத்திரம் வாசித்தளிப்பதென்றும் வேலூர் நகரசபை இன்று முடிவு செய்துள்ளது.

அதுபற்றி கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவாக 18 வோட்டுகளும், எதிராக 11 வோட்டுகளும் கிடைத்தன.

தீர்மானத்தை ஆர் ராதா கிருஷ்ணன் முன்மொழிந்தார். வழிமொழிந்தவர், ஆர். சுப்ரமணியம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—12—1953 சனி

"டில்லி சலோ!"

சென்னை முதன் மந்திரி ஆச்சாரியார் கடைசியாக டெல்லி நோக்கிப் பறந்துவிட்டார். முதலில் டெல்லியில் கூடப்போகும் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லையென்று திட்டவட்டமாக, முடிவான தீர்மானமாக அவர் வெளியிட்டிருந்தார். இப்பொழுதுகூட அவர் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் செல்லவில்லையாம். டில்லிப் பல்கலைக் கழகம் அவருக்கு அளிக்கவிருக்கும் 'டாக்டர்' பட்டத்தை நேரில் பெற்றுக்கொள்ளப் போகும் ஒரே நோக்கத்துடனேயே அவர் செல்லுகிறார் என்று கூறப்படுகிறது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அல்லது எதிர்பாராத சம்பவமாக, இவர் டெல்லி செல்லுகிற நாளும், காரியக் கமிட்டி கூடுகிற நாளும் ஒன்றுபட்டன! எனவே, சென்றவாக்கில் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வாரெனப் பத்திரிகைகள் அறிவித்துள்ளன. சென்ற ஒன்றரை ஆண்டு காலமாக, காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டங்கள் எதிலும் கலந்துகொள்ளாத கனம் ஆச்சாரியார் நீண்ட நாட்களுக்குப்பின், இப்பொழுது கலந்துகொள்கிறார்; அதுவும் அதற்காகச் சென்ற காரணத்தால் அல்ல, வேறொரு வேலையாகச் சென்றபொழுது ஏற்பட்ட எதிர்பாராத ஒற்றுமையின் காரணமாக!

அரசியல் உலகில் இத்தகைய எதிர்பாராத ஒற்றுமைகள் ஏற்படுவதுண்டு! "சீசர் ஒரு விருந்து நடத்த வேண்டுமென்று நினைத்தால், அவருடைய பிறந்த நாள் உடனே வந்துவிடும்; வந்த ஆட்களை சகிக்க அவருக்கு மனமில்லாவிட்டாலும், அல்லது வேறுவகையாகத் தாமதம் வேண்டுமென்றாலும், சீசருக்கு உடனே காய்ச்சல் வந்துவிடும்," என்று வரலாற்று ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார். அதைப்போல அரசியல் தலைவர்களுக்குத் திடீரென எதிர்பாராத வகைகளில் வாய்ப்புகள் தாமாக வந்துவிடுகின்றன! அந்த வகையில், ஆச்சாரியாரும் டில்லி நோக்கிப் பறந்துள்ளார், டாக்டர் பட்டம் பெற; அதே சமயத்தில், காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்ள!

டில்லிப் பல்கலைக் கழகம் அவருக்கு டாக்டர் பட்டம் அளிக்கிறது; காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கும் 'மந்திரி பட்டம்' பற்றி விவாதம் எழுமென்று தெரிகிறது. தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜரும் சென்றுள்ளார்.

புதிய 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றுக்கொண்டு, பழைய 'மந்திரி' பட்டத்தை ஆச்சாரியார் இழந்துவிட்டுத் திரும்புவாரா? நமக்கு இவை பற்றி அதிகம் தெரியாது. அவை மாற்றுக் கட்சியினரின் கோட்டைக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகளாகும்.

முடிவு எதுவென்று முன்கூட்டி ஆரூடம் கூறவோ அல்லது இவ்விதம் நடந்தால் நல்லது என்று நமது விருப்பத்தை வெளியிடும் கடப்பாடோ நமக்குக் கிடையாது. முடிவு எவ்விதமானாலும்—வெற்றி, தோல்வி எவர் பக்கம் இருந்தபோதிலும், பூமணத்துடன் ஆச்சாரியார் திரும்பினாலும், வெற்றிக் கொடியுடன் வேறொரு தலைவர் மீண்டாலும் நாம் கவனிக்க வேண்டியது—தமிழ் நாட்டு அரசியலில் பதவி பற்றி எத்தகைய முடிவு என்பதைவிட, அந்த முடிவு செய்யப்படும் விதம், முடிவு செய்யப்படும் இடம் இவைகளைக் கவனிக்க வேண்டும்.

சென்னைக்கு யார் முதன் மந்திரியாயிருப்பது? இந்த முடிவு சென்னை சட்டசபை அங்கத்தினர்களால் தீர்மானிக்கப்படவில்லை. அது டில்லியில் தீர்மானிக்கப்படுகிறது. ஆச்சாரியாரா? காமராஜரா? இவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை சென்னை சட்டசபைக் காங்கிரஸ் மெம்பர்களுக்குக் கிடையாது. டில்லி காரியக் கமிட்டியில் அது தீர்மானிக்கப்படுகிறது. அதற்கு ஆச்சாரியார் காமராஜர் இருவருமே டில்லிக்குத்தான் பறந்து செல்ல வேண்டியிருக்கிறது!

தென்னாட்டின் அரசியல் நிலை வடநாட்டில் முடிவு செய்யப்படுகிறது. சென்னை மந்திரி சபை டில்லியில் பொறுக்கப்படுகிறது. சுதந்திரம் வந்தது, ஆனால் அது டில்லியுடன் நின்றுவிட்டது. திராவிடத்தின் நிலை லண்டனில் தீர்மானிக்கப்படுவதுபோய், இன்று டில்லியில் ஆராயப்படுகிறது. காமராஜர் எவ்வளவுதான் பலம் பெற்று விளங்கியபோதிலும், டாக்டர் வரதராஜுலு நாயுடு எவ்வளவுதான் அறிக்கைகளை விட்டபோதிலும், கடைசியாகத் தென்னாட்டின் 'தலைவிதியை' நிர்ணயிக்கும் உரிமை வடநாட்டார் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதை ஒத்துக்கொண்ட நிலையில்தான் காமராஜர், ஆச்சாரியார் இருவரும் சென்றுள்ளனர். அரசியல் அமைப்பில், திராவிடம் வடநாட்டுக்கு அடிமைப்பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

தென்னாட்டின் அரசியல் நிலையில்—காங்கிரஸ் சட்டசபைக் கட்சிக்கு யார் தலைவர் என்ற முடிவு செய்ய இருவரும் "டில்லி சலோ!" என்றே, ராஜபுதன பாலைவன நகரை நோக்கித்தான் காவடி தூக்கவேண்டியிருக்கிறது.

காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, கம்யூனிஸ்டு கட்சி போன்ற மற்றெல்லா அரசியல் கட்சிகளிலும் திராவிடத்தின் அரசியல் நிலை பற்றிய தீர்மானங்களும், அவ்வாறு தீர்மானிக்கும் உரிமையும் வடநாட்டிலேயே இருக்கிறது. மாறுபட்ட கலாசாரம், வேறுபட்ட பண்பாடு இவைகளிருக்கிற காரணத்தால் திராவிடத்தின் விருப்பு வெறுப்புகள் வடநாட்டினருக்குப் புரிவதில்லை. புரிந்தாலும் அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்போக்கும் கிடையாது.

உரத்த குரலில் உபதேசிக்கும் சர்வாதிகாரப் போக்கிலேயே, வடநாட்டில் தலைமைபீடம் பெற்றுள்ள அரசியல் கட்சிகளனைத்தும் இருக்கிறது.

திராவிடத்தின் அரசியல், பொருளாதாரப் பிடிகள் வடநாட்டாரிடம் இருக்கிறவரை, திராவிடத்தின் அரசியல் பிரச்சனைகள் டில்லியில் தீர்மானிக்கப்படுகிறவரை, திராவிடத்தின் அரசியல் சச்சரவுகளுக்குத் தீர்ப்புக்கூற டில்லி நோக்கி அரசியல்வாதிகள் பறந்து செல்லுகிறவரை, எதற்கெடுத்தாலும் வரிப் பணத்தில் பங்கு பெறுவதிலிருந்து மந்திரி சபைக்குத் தலைவராக யார் வருவது என்பதுவரை, எழுகிற கேள்விகளுக்கெல்லாம் 'டில்லி சலோ!' என்று, டில்லியை நோக்கி இங்கிருப்போர் செல்லுமவரை, திராவிடத்தின் பிரச்சினைகள் தீர்வதற்கு வழி கிடையாது.

'தமிழறிவும், தமிழன்பும் அவருக்குக் கிடையாது'

'இறந்த மொழியாம் வடமொழிக்கு ஏன் இந்த ஆதரவு?'

சி. பி. ராமசாமி அய்யர் போக்கும், நோக்கும் பற்றி எஸ். எஸ். பாரதியார்

பசுமலை—

பசுமலையைச் சார்ந்த வழக்கறிஞர் பேராசிரியர் தோழர் எஸ். எஸ். பாரதியார் எம். ஏ. பி. எல். பின்வருமாறு எழுதுகிறார்:—

"சி. பி. ராமசாமி அய்யர் ஒரு கல்வி நிபுணர் அல்லர். அன்றியும் எப்போதும் இவர் தமக்குள்ள தமிழறிவையோ, அல்லது தமிழன்பையோ வெளிக்காட்டியதில்லை. தமிழறிவும், தமிழன்பால் ஓரளவு அன்பும் கொண்ட பெருமனிதர்கள் நமது நாட்டில் இல்லாமற் போகவில்லை."

"இலக்கிய வளம் மிகுந்த—வளர்ச்சி யடைந்த பண்டைய பெருமொழி என்ற வகையில் வடமொழியின் முக்கியத்தை வலியுறுத்தியும், வடமொழிக்கு ஆதரவும், கவனமும் அளிக்கப்படவேண்டிய அவசியத்தைப் பற்றி, பல்கலைக் கழக அதிகாரிகளுக்கு உபதேசித்தும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணை வேந்தர் சர் சி. பி. ராமசாமி அய்யர் பேசியிருப்பது கண்டு நான் வியப்புற்றேன். இது அவசியமற்றதும், விரும்பத்தகாததுமாக தோன்றுகிறது. வடமொழியின் மதிப்பையும், தகுதியையும் பற்றி, ஐயுறவுபவர்களே அனேகமாக யாரோ இல்லை."

"ஆனால் இத்தமிழ்ப் பல்கலைக் கழகத்திலோ, பாடத் திட்டத்திலோ ஓர் இறந்த மொழிக்குக் காட்டப்பட வேண்டியதைவிட அதிகமான அளவு கவனம் வடமொழி இலக்கியத்திற்கு அளிக்கப்படுகிறது."

சர். சி. பி. இராமசாமி ஐயருடைய சிபாரிசுகள் அவருடைய சொந்தக் கருத்துக்களாயிருந்தால், அது பற்றி எவரும் கவலைப்பட மாட்டார்கள். ஆனால் இவர் இப்பொழுது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகவுமிருந்து வருகிறார். அதனால், இவருடைய கருத்துக்கள் பல்கலைக் கழக அதிகாரிகளை, இப்பல்கலைக் கழக வேந்தராகிய ராஜா சர் முத்தையா செட்டியார் ஆகியோரின் கவனங்களை ஈர்க்கக் கூடியனவாயுள்ளன.

இதுவல்லாமல், பாரத நாட்டின் கலாசார உலகம் முழுவதுமுள்ள எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் வடமொழி முதன்மையான இடத்தைப் பெற்று அனுபவித்து வருகிறது.

"ஆனால் வடமொழியைப் போன்றே பண்டைய பெருமையுடையதும், முன்னேற்ற மடைந்துள்ளதும், போற்றத் தக்கதுமாகிய தமிழ் பெருமொழி கேட்பாரற்று, கவனிக்கப்படாமல் கிடந்து வருகிறது. ஒரு விதத்தில், இன்னும் உயிர்ப்புமிக்கதாய், முழுச் சக்தியுடன் செயல்படக்கூடும் தமிழ் மொழியின் பால் இன்னும் அதிகமான அளவு கவனம் செலுத்தப்பட வேண்டும்."

தமிழ்க் கலாசாரத்தில் குறிப்பாக அக்கறை காட்ட உத்தேசித்துள்ள பல்கலைக் கழகம் ஒன்று தான் எனினும், போதிய நிதிவளமின்மையால் உண்மையிலேயே தமிழ் மொழியின்பால் தேவையான கவனம் செலுத்தப்படவில்லை.

சர். சி. பி. ராமசாமி அய்யர், பெரும் சட்ட சபை நிபுணர்; சிறந்த தேர்ந்த வழக்கறிஞர்; வடமொழிக் கல்வியில் தேர்ச்சியுடையவர்.

ஆனால், இதற்கு மாறாக இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது வியப்புடையளிக்கிறது; அதுபோலவே சர் சி. பி. ஆர். அய்யர் இப்பதவியை ஏற்றுக்கொண்டதும் ஆச்சரியமளிக்கிறது. இவ்விளைவாகத்தான் இந்த ஒரே தமிழ்ப் பல்கலைக் கழகத்தில், தமது அதிகார பூர்வமான முதன்முறைப் பேச்சில் வடமொழியின்பால் அதிகமான அளவு குறிப்பான கவனத்தைக் காட்டி, இம்மொழிக்கு ஆதரவு அளிக்கவேண்டியது பற்றி அவர் பேச நேர்ந்தது.

இவருடைய அதிகார பூர்வமான வேண்டுகோளுக்கு யாதோரு அறிவாளரோ அதிகமான கவனஞ் செலுத்தமாட்டார்களென்று நாம் நம்புவோமாக. பல்கலைக் கழக மேல் சபை (சிண்டிகேட்) அல்லது பொதுச் சபையின் (செனட்) கவனம் இவ்வேண்டுகோளால் ஈர்க்கப்படாமல் தமிழ்க் கலாசாரம், தமிழ்மொழிப் பாடங்கள் ஆகியவற்றிற்கு, மேலும் போதுமான அதிக அளவு உதவி அளிக்கப்படுமென்றும் நாம் நம்புவோமாக.

கராச்சி, டிச. 4—

பாகிஸ்தான், தனக்குத் தேவையான கோதுமைகளை, தானே பூர்த்தி செய்து கொள்கிறது. சென்ற ஜனவரியிலிருந்து கோதுமை இறக்குமதி அடியோடு நின்றுவிட்டது. பாகிஸ்தானுக்கு ஆண்டொன்றுக்கு நாற்பதினாயிரம் டன் கோதுமைகள் தேவையாக உள்ளது.

ஆசிரியர் பிரதிநிதியின் ஆச்சாரியார் பக்தி

ஆசிரியர்களிடம் பரிவுகாட்டுவதாக நடிப்பு!

காரைக்குடி, டிச. 2—

இங்கோர் ஆசிரியர் கூட்டவையின் சார்பாக, நேற்று ஒரு கூட்டம் மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. அதுபோது சென்னை மேல் சபையில் ஆசிரியர் தொகுதி உறுப்பினராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி எம். எல். சி. பேசினார்.

வாய்மை!

அவர் பேசுகையில், "ஆச்சாரியார் கொண்டுவந்துள்ள தொடக்கக் கல்வித் திட்டப்படி அந்த ஆசிரியர்கள் வாரத்தில் ஆறு நாளும், ஒரு நாளைக்கு ஆறுமணி நேரமும் வேலை பார்க்கும்படி வேலை மிகுதியாக சுமத்தப்பட்டிருக்கிறது.

ஜாதிப்பற்று!

இத்தகைய திட்டத்தைக் கொண்டுவந்த ஆச்சாரியார் முன்கூட்டியே அந்த ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்த பணம் ஒதுக்கி வைத்தபிறகுதான், இத்திட்டத்தை, கொண்டுவந்திருப்பார் என்பது எனக்குத் தெரியும்.

கண்துடைப்பு!

அப்படி உயர்த்தாவிடில், போராடியேனும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சம்பளம் உயர்த்தப் பாடுபட வேண்டும்.

வக்காலத்து!

இன்றைய அமைச்சரவை மாறிவிட்டால், ஆசிரியர்கள் குறைகளைத் தீர்க்க சிரமப்பட வேண்டும்.

ஊருக்கு!

ஆசிரியர்களிடையே சாதிகள் போன்ற பல பிரிவுகள் இருப்பதை ஒழிக்க. எல்லோரும் ஒன்றுபட்டு ஊர்தோறும் ஆசிரியர்களின் பொதுக் கழகங்கள் ஏற்படவேண்டும்," என்றார்.

எல்லோரும் ஒன்றென்பது ஏட்டளவில் தான்!

சமபந்தி விருந்துக்கும் கலெக்டர் கட்டளை தேவைப்படுகிறது

சேலம், டிச. 4—

நாமக்கல் தாலுக்காவைச் சேர்ந்த எழூரில் திங்கள் மாலை அரிஜன தினம் கொண்டாடப்பட்டது. மாவட்ட அதிகாரி பி. சமகாயகம் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

தேனீர் விருந்து நடைபெற்றது. ஜாதி இந்துக்களும், அரிஜனங்களும் அதில் கலந்து கொண்டனர். அரிஜனங்கள் தின்பண்டங்களை பரிமாறினர். டி. கே. கோபாலப்பர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். வி. வாஞ்சிநாதய்யர் சொற்பொழிவாற்றினார்.

ஓய்வு பெற்றும் பதவி அவலைத் தொடர்கிறது!

வெங்கடராம அய்யர் 'சுப்ரீம் கோர்ட்' நீதிபதியானார்

புதுடெல்லி, டிச. 3—

ஜனவரி 4-ம் தேதி பதவியிலிருந்து ஓய்வு பெறும் சுப்ரீம் கோர்ட் நீதிபதி பதஞ்சலி சாஸ்திரியின் பதவிக்கு நீதிபதி வெங்கட்ராமையர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சென்னை ஐகோர்ட் நீடையர் நீதிபதி டி. எல். வெங்கட்ராமய்யர், ஜன. 4-ம் தேதி முதல் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளில் ஒருவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தூத்துக்குடி சதி வழக்கு:

‘நான் காங்கிரஸ் கட்சி உறுப்பினன்’

—(0)—

‘நான் பிள்ளையார் கோவிலுக்கு — — தினந்தோறும் செல்வதுண்டு’

‘நான் என் வாழ்க்கையிலேயே இத்தகைய துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டதில்லை!’

‘கூட்டத்தினர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்று என்னால் கூறமுடியாது!’

திருநெல்வேலி, டிச 2—

இன்றையதினம் நடைபெற்ற தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை 4-12-53 ‘நம்நாடு’ இதழில் வெளியிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து விசாரணையின் தொடர்ச்சியில், பிராசிக்யூஷன் தரப்பில் விசாரிக்கப்பட்ட 5-வது சாட்சியின் விசாரணை கீழே தரப்பட்டுள்ளது:—

*　*　*

5-வது பிராசிக்யூஷன் சாட்சி கோதண்டராம பண்ணையார் சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:—

“நான் தூத்துக்குடியைச் சேர்ந்தவன்; தையல் தொழில் நடத்துகிறேன். எனக்கு தி.மு. கழகத்திடம் அனுதாபம் உண்டு. மேலூரில் தி. மு. கழக வாசகசாலை ஒன்றிருக்கிறது. செய்தித்தாள்களை படிக்க நான் அங்கு செல்வது வழக்கம்.

ஜூலை 14-ந் தேதி மாலை 4-40 மணிக்கு வழக்கம்போல் அங்கு சென்றேன். சிலர் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். நாகம்மாள் வாசகசாலையில், தி. மு. கழகத்திற்குத் தொண்டர்கள் திரட்டப்படுவதாக அவர்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டேன். நான் அங்கு சென்று மாடிப்படியில் நின்றுகொண்டிருந்தேன். முதல் எதிரி, 2-வது, 3-வது, 4-வது, 5-வது எதிரிகளுடன் டேசியலைக் கேட்டேன். டிரெயின்களை நிறுத்துவது பற்றி அவர்கள் பேசிக்கொண்டிருந்தனர். நான், அவர்கள் முகவை ஆதரிக்கவில்லையாதலால் வெளியேறி வீதி சென்றுவிட்டேன். என்னை யாரும் இக்கூட்டத்திற்கு அழைக்கவில்லை. ரயில் நிறுத்தத்தில் நான் கலந்து கொள்ளவில்லை. 10 நாட்கள் கழித்த பிறகு போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.

•　•　•

திரு. எம் செல்லையப்பப் பிள்ளை குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“தி. மு. கழகக் கட்சியை நான் தீவிரமாக ஆதரித்து வந்தேன். ஆனால் அக்கட்சியின் நிர்வாகிகளைத் தெரியாது.”

“தி. மு. கழகத்திற்கு இரண்டு அதிகாரிகள் உண்டு. கட்சிக்குச் சில பத்திரிகைகள் உண்டு. ‘நம் நாடு’ ‘திராவிட நாடு’ ஆகியவை அக்கட்சியின் பத்திரிகைகள். சில வாராந்திர சஞ்சிகைகளும் அவர்க்கு உண்டு. வழக்கமாக ‘திராவிட நாடு’ பத்திரிகைதான் படிப்பேன். எல்லோரும் சங்க வாசகசாலைக்குச் சென்று பத்திரிகைகள் படிக்கமுடியும்.”

“ஜூலை 14-ந் தேதிக்கு முன்பு ஒரு வாரம் வரை நான் சங்கத்தில் பத்திரிகைகள் படிக்கவில்லை.”

“ஜூலை 14-ந் தேதியன்று ‘திராவிட நாடு’ பத்திரிகையின் சில பழைய பத்திரிகைகளைப் படித்தேன்.”

இத்துடன் இந்தச் சாட்சியின் விசாரணை முடிவுற்றது.

★

திருநெல்வேலி, டிச 3—

இன்று மீண்டும் விசேஷ மாஜிஸ்திரேட் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது 5-வது பிராசிக்யூஷன் சாட்சியாக ஈ. கோதண்டராம பண்ணையார் எதிர்தரப்பு வழக்கறிஞர்களால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

திரு. பி. ஏ. தங்கசாமி அவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“நான், கிருஷ்ண பண்ணையாருக்குச் சொந்தமான தையல் கடையில் மாதம் ரூ 35 சம்பளத்தில் வேலை செய்கிறேன்; 3, 5-வது பிராசிக்யூஷன் சாட்சிகள் அங்கு இருந்தனர்.”

திரு. வி. கந்தையா அவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“மேலூர் வாசகசாலை தி. மு. கழகத்திற்குச் சொந்தமென்பது எனக்குத் தெரியும். அதன் நிர்வாகிகள் யார் என்பது எனக்குத் தெரியாது.”

திரு. என். சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“தி. மு. கழகத்தின் கொள்கைகள் எனக்குத் தெரியும்; திராவிடர்களுக்குத் தனி ராஜ்யம் வேண்டுமென்பதும், பிராமணர்களை விரட்ட வேண்டுமென்பதும் தி. மு. கழகத்தின் கொள்கை என்பதும் எனக்குத் தெரியும்; தி. மு. கழகத்திடம் அனுதாபம் காட்டும் பிராமணர்கள் அதில் இருக்கின்றனரா என்பது எனக்குத் தெரியாது.”

“தூத்துக்குடியில் தி. மு. கழகக் கூட்டங்கள் நடைபெறுவதை பிராமணர்கள் எதிர்த்தனரா என்பது எனக்குத் தெரியாது.”

“புது ஆரம்பக் கல்வித் திட்டத்தை எதிர்க்க ரயிலை நிறுத்த தி. மு. கழகம் விரும்பியது; அது பற்றிய நோட்டீஸை நான் பார்த்ததுண்டு.”

★

6-வது சாட்சி

பிறகு சங்கரத்தேவர் 6-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“தூத்துக்குடி ஆண்டாள் தெருவில் வெற்றிலைப் பாக்கு கடை வைத்திருக்கிறேன்; மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடக்கே என் கடை இருக்கிறது; ஜூலை 15-ந் தேதி காலை 6 மணிக்கு என் கடையைத் திறந்தேன்; சுமார் 6½ மணிக்கு டிரெயின்கள் நிறுத்தப்பட்டதாக சிலர் பேசிக்கொண்டு சென்றனர்; காலை 7 மணிக்கு ஒரு டிரெயின் வந்தது; அது காலதாமதமாக மீளூர் ஸ்டேஷனிலிருந்து, மேலூருக்கு வந்து சேர்ந்தது; சுமார் 200 பேர் பாதையில் உட்கார்ந்திருந்தனர்; என்ஜின் முன் சுமார் 1000 பேர் கூடியிருந்தனர்; ஆண்டாள் தெருவில் என் கடை முன் ஒரு கூட்டம் கூடியிருந்தது; நான் கடையை மூடிக்கொண்டு வீடு சென்றுவிட்டேன்; காலை 8 மணி வரை கூட்டம் அங்கு நின்று கொண்டிருந்தது; கூட்டத்தினர் மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறிக்கொண்டு மக்கள் ஓடி வந்தனர்; கூட்டம் டிரெயின் பக்கத்திலிருந்து மேற்கே ஓடிக்கொண்டிருந்தது. கற்களும் வீசப்பட்டன; மாமனார் உத்தரவுப்படி எங்கள் வீட்டு சாம்பவுண்டு கதவை மூடிவிட்டு உள்ளே சென்றுவிட்டேன்; பிறகு துப்பாக்கி வேட்டு சப்தத்தைக் கேட்டேன்; டிரெயின் கோர்ந்து செல்லும் சப்தத்தையும் கேட்டேன்; பிறகு வீட்டிலிருந்து வெளியே வந்தேன்; மாலை 3-மணிக்குத்தான் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்.”

குறுக்கு விசாரணை

திரு. எம் செல்லையப்ப பிள்ளையால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“கூட்டத்தினர் எங்கிருந்து வந்தார்கள் என்று என்னால் கூற முடியாது.”

“என் வீட்டிலிருந்து சுமார் ¼ பர்லாங் தூரம் வரை ரயில்பாதை என் கண்ணுக்குத் தெரியும்; பெருங் கூட்டத்தைப் பார்த்தவுடன் நான் பயந்துவிட்டேன்; கடையிலிருந்தபோது என்னைப் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் விசாரித்தார்; நான் வசித்து வந்த காம்பவுண்டில் உள்ள மற்றவர்கள் விசாரிக்கப்பட்டனர் என்பது எனக்குத் தெரியாது; அன்று காலை ரயில்வே பாதையில் ஏராளமான போலீசார் காவல் புரிந்து வந்தனர்.”

“என்மீது எவ்வித மதுவிலக்கு வழக்கும் கிடையாது.”

திரு. பி ஏ. தங்கசாமி அவர்களாலும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

★

7-வது சாட்சி

பிறகு கருப்பசாமி 7-வது பிராசிக்யூஷன் சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

“தூத்துக்குடி ரங்கநாதபுரம் தெருவில் நான் வசித்து வருகிறேன்; அது, மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு தெற்கே இருக்கிறது; ஸ்டேஷனுக்கு மேற்கே பத்திரகாளியம்மன் கோவில் இருக்கிறது; ஜூலை 15-ந் தேதி காலை 7 மணிக்கு பிள்ளையார் கோவிலுக்குச் சென்றிருந்தேன்; இது, காளி அம்மன் கோவிலுக்குப் பின்புறத்திலிருக்கிறது; ரயில் பாதைக்கு வடக்கிலும், தெற்கிலும் இரு பக்கங்களிலும் கூட்டம் கூடியிருந்ததைப் பார்த்தேன்; சுமார் இருநூறு பேர் அக்கூட்டத்தில் இருக்கலாம்; தூத்துக்குடியிலிருந்து மேலூருக்கு ஒரு டிரெயின் வந்து கொண்டிருந்தது; என்ஜின் முன் இருநூறு பேர் கூடியிருந்தனர்; ‘நேரு சர்க்கார் ஒழிக, ராஜாஜி சர்க்கார் ஒழிக,’ என்று கூட்டத்தினர் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்களுக்கு கூட்டத்திலிருந்தவர்கள், பானகம், பீடிகள் இவற்றை வழங்கிக்கொண்டிருந்தனர்; காலை 8-மணிக்கு சப்-கலெக்டர் வந்தார்; போலீசாரும் அவ்விடத்தில் இருந்தனர்; 5—வது எதிரி நடராசன் சப்-இன்ஸ்பெக்டர் கூப்பிட்டு அவருடன் பேசிக்கொண்டிருந்தார்; அவர்கள் என்ன பேசிக்கொண்டிருந்தனர் என்பது எனக்குத் தெரியாது; நான் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தேன்; நடராசன் பிறகு போய்விட்டார்; பின்வே போலீசார் பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்; அவர்களை அடிக்காதீர்; என்று கூட்டத்தினர் கத்தினர்; பிறகு ஜில்லா கலெக்டர் வந்தார். 5—வது எதிரியைக் கூப்பிட்டார்; அவர், மேற்கு திசையிலிருந்து வந்தார்; ரயில்வே பிளாட்பாரத்தில் ஜில்லா கலெக்டரும் 5-வது எதிரியும் பேசிக் கொண்டிருந்தனர்; அவர்கள் என்ன பேசிக் கொண்டிருந்தனர் என்பது எனக்குத் தெரியாது: பிறகு 5-வது எதிரி மேற்கு நோக்கிச் சென்றார்; மலபார் போலீசார் வந்து பாதையில் உட்கார்ந்தவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்தனர்; கூட்டத்தின் இருபுறங்களிலிருந்தும் போலீசார் மீது கற்களை வீசினர்; தம் துப்பாக்கியைத் தூக்கிக் காட்டி, ஒரு மலபார் போலீசார் எச்சரித்தார்; ‘நான் சுடப் போகிறேன்’ என்று அவர் கூறினர்; நான் பத்திரகாளியம்மன் கோவில் முன்பாக ஓடினேன்; மற்றும் சிலரும் ஓடினர்; நான் 7 அல்லது 8 வேட்டு சப்தத்தைக் கேட்டேன்; கூட்டம் கலைந்து சென்றுவிட்டது; ரயில் பிறகு சென்றது; சம்பவம் நடந்த மறுதினம் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் விசாரிக்கப்பட்டேன்.”

“நான் காங்கிரஸ் கட்சி மெம்பர்.”

குறுக்கு விசாரணை

திரு எம். செல்லையப்பர் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:—

“நான் காங்கிரஸ்காரன்; கடந்த 27 வருடங்களாக கதர் அணிவையே உடுத்துகிறேன் தூத்துக்குடியில் தி. மு. கழகம் வலுவான கட்சி என்று என்னால் கூற முடியாது; தி. மு. கழகத்திடம் எனக்கு விரோதம் எதுவும் கிடையாது.”

“பிள்ளையார் கோவிலுக்கு நான் தினந்தோறும் செல்வதுண்டு; அங்கு நான் 5 நிமிடம் வரை கடவுளை வழிபட்டேன்.”

“சப்-கலெக்டரும், 5-வது எதிரியும் பேசிக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன். கடந்த 15 வருடங்களாக எனக்கு 5-வது எதிரியைத் தெரியும்; நான் அவருடன் எதுவும் பேசியதில்லை; நான் தூத்துக்குடி பஜாரில் நாருவேலை செய்கிறேன்; சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணய்யர் என்னை விசாரிக்கவில்லை; ராஜூதான் என்னை விசாரித்தார்; இன்ஸ்பெக்டர் முன் ஆஜர் செய்யப்பட்டேனா நான் பார்த்த சம்பவங்களை யாரிடமும் கூறவில்லை.”

திரு. பி. ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

“பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் எனக்குண்டு; ராஜாஜியின் புதுக் கல்வித் திட்டத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கிறேன்; இத்திட்டம் பள்ளிச் சிறுவர்களுக்கு தீமை விளைவிக்கும் என்று பிரசாரம் செய்யப்படும் கூட்டங்களுக்கு நான் சென்றதில்லை; இத்தகைய அபிப்பிராயங்களைப் பத்திரிகைகளிலதான் படித்தேன்; பாதையில் உட்கார்ந்தவர்களில் காங்கிரஸ்காரர் யாருமில்லை; காங்கிரஸ்காரர் யாருக்கும் தடியடிக் காயமேற்பட்டதாக எனக்குத் தெரியாது; மலபார் போலீசார்தான் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; எச்சரிக்கை செய்யப்பட்ட பிறகே அவர்கள் சுட்டனர்.”

“நான் என் வாழ்க்கையிலேயே இத்தகைய துப்பாக்கிப் பிரயோகத்தைப் பார்த்ததில்லை.”

திரு வி. என். கந்தையாவால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில், சாட்சி கூறியதாவது:—

“8-வது சாட்சி கவிஞர் பண்ணையாரை எனக்குத் தெரியாது.”

இன்றைய விசாரணை இத்துடன் முடிந்தது. (ந. நி.)

‘காங்கிரசார் அட்டூழியங்கள் பல புரிந்துள்ளனர்’

—[o]—

அவருக்கு பதவி ஆசை கிடையாதாம்!

நிலையான ஆட்சி காணவே அமைச்சரானாராம்!

திருவத்திபுரம், டிச. 2—

“காங்கிரஸ்காரர்கள் சென்ற சில ஆண்டுகளாக அட்டூழியங்கள் பல செய்துள்ளனர். அவர்கள் பதவிக்கு வரக்கூடாது என்பதற்காகத்தான், சென்ற பொதுத் தேர்தலில் நானும்; எனது பொதுநலக் கட்சியின் ஆறுபேர்களும் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்டோம்,”

—என்று, மந்திரி மாணிக்கவேலர் நேற்று திருவத்திபுரத்தில் பேசுகையில் கூறினர்.

தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது:—

“மந்திரிசபை அமைகின்ற நேரத்தில நான் எல்லாக் கட்சிகளுடனும் உறவாடினேன்; எதிர்க்கட்சியின் கட்டுப்பாட்டை வளித்தேன்; நிலையான ஆட்சி அமைப்பதற்கு எதிர்கட்சியினர் தயாராக இருந்தாலும், அவர்களோடு ஒத்துழைக்க நான் தயாராக இருந்தேன். ஐக்கிய முன்னணியை அவர்கள் கூப்பிடவில்லை; காங்கிரசை அழைத்தார்; அவர்கள் தான் நிலையான ஆட்சியை அமைக்க முடியும் எனக் கருதி அவர்களோடு ஒத்துழைக்கிறேன் என உறுதி கொடுத்தேன் மக்களுக்குத் தொண்டு செய்யவும், உறுதியான ஆட்சியை நிறுவவும் தான், நான் காங்கிரசோடு ஒத்துழைக்கின்றேன்; பதவியில் எனக்கு ஆசை இல்லை.” என்றார்.

காங்கிரஸ் மிட்டாக்களின் ‘பொந்து’ ஆகிறது!

பெப்சு ராஜப்பிரமுகரின் இளவலின் நேரு பக்தி!

பாடியாலா, டிச. 2—

‘பெப்சு’ ராஜப் பிரமுகரின் சகோதரர் மகாராஜ் குமார் பிரிஜிந்தர் சிங்கும், அவரை ஒத்த 17 மெம்பர்களும் இந்திய தேசிய காங்கிரசில் சேருவதென்று முடிவிற்கு வந்தனர்.

தங்களுடைய முடிவை ‘பெப்சு’ காங்கிரஸ் குழுவின் தலைவரான சர்தார் ரகுவீர் சிங்கிற்கு அறிவித்துள்ளனர்.

காங்கிரசாலும், நேருவாலும் தான் தங்களுடைய ஜாதியினையும், பிரஜைகளையும் பாதுகாக்க முடியும் என்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

மாபெரும் பெட்ரோலியம் தொழிற்சாலை

கிட்டாக், டிச. 4—

கிழக்கு பாகிஸ்தானில் மாபெரும் பெட்ரோலியம் தொழிற்சாலைக்கு 1 கோடி செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது கட்டி முடிக்க இன்னும் இரு ஆண்டுகள் ஆகும். 1,80,00,000 காலன் பெட்ரோல் ‘ஸ்டாக்’ செய்ய வசதி ஏற்படுத்தப்படுமாம்.

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

இதுவரை கிடைத்துள்ளது ரூ. 6363-1-8

★

முன் (30-11-53) தொடர்ச்சி ரூ.	5630-11—7
தோணம்பட்டி வ. சுப்ரமணியம்	1—0—0
மதுரை சவுரிராசன்	1—0—0
வேலூர் மணிவாசகம்—மோகன்ராஜ்	1—0—0
வடசென்னை டி. வி. தொண்டர்	7—0—0
„ ரா. பாலன்	1—0—0
ம. மேலவள்ளியூர் தி. மு. கழகம்	7—0—0
சென்னை துரைவேலு	2—0—0
„ சக்ரவர்த்தி	1—0—0
„ வேகாசலம்	1—0—0
„ கோடீஸ்வரன்	1—0—0
„ குப்புசாமி	1—0—0
„ பதமநாபன்	1—0—0
„ குமரேசன்	1—0—0
„ ராசன், முத்தகிருஷ்ணன், ரத்தினவேலு, மணிவாசகம், கன்னியப்பன், வெங்கடாசலம், முருகேசன், தியாகராசன், திருவரங்கம், பார்த்தசாரதி ராமசாமி முதலியோர்	4-12—0
ஆலவல்சின்னம்பாளையம் கே. முத்துசாமி	1—0—0
பொள்ளாச்சி பி டி. பல்லீர்செல்வம்	1—0—0
„ கே. வி. பாலசந்திரன்	1—0—0
„ ஆர். கோவிந்தசாமி	1—0—0
„ வி. டி. டி. மூர்த்தி	1—0—0
„ கே. சுந்தரம்	1—0—0
„ பி சுந்தரம், வேலுசாமி ஆகியோர்	1—0—0
பரவை நாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்	3—8—0
காளி தி மு. கழக உறுப்பினர்கள்	5—0—0
சென்னை 17—து கண்ணுபிரம்	1—0 -0
சிந்தாமணி செ கோவிந்தசாமி	1—0—0
„ ச. வேணுகோபால்	1—0—0
„ என். ரங்கநாதன்	1—0—0
„ மா. ராகவன்	1—0—0
„ ச. ராமசாமி	1—0—0
„ பா. கோவிந்தசாமி	1—0—0
„ அ. அப்பாகண்ணு	1—0—0
„ டி. கோதண்டபாணி	1—0—0
மூக்கூடல் அ. அப்பாதுரை	5—0—0
„ எம். வி. நாதன் அன் சன்ஸ்	3—0—0
„ மு. வேலுசாமி	3—0—0
„ 8—11—53-ந் தேதி பொதுக் கூட்ட வசூல்	8—7—0
„ இரா இளந்தமிழன்	2—0—0
„ மு. ச முத்தாண்டி	2—0—0
„ செ. சேதுராமன்	2—0—0
„ அ. கண்ணையா	2—0—0
„ சி. கனகசபாபதி	2—0—0
„ செ. மு செந்திவேல்	1—0—0
„ த. கைலாசம்	1—0—0
„ பொ. பூவேந்திரன்	1—0—0
„ ஐ. சோமநாதன்	1—0—0
„ ஆர் எஸ். தம்பி	1—0—0
„ ரா. சண்முகவேல்	1—0—0
„ ரா, கிருஷ்ணா	1—0—0
„ பொ. கா. ஆதிமூலம்	1—0—0
„ சண்முகம், கருப்பையா, செல்லப்பா, சவரிமுத்து, கணபதி ஆகியோர்	2—8—0
பட்டுக்கோட்டை தி. மு. கழகம்	10—0—0
தொண்டமுத்தூர் பி. ஜி. சரோஜினி தேவி	2—0—0
சேலம் கே. தொண்டையா	3—0—0
„ ஆர். எம். கிருஷ்ணசாமி	1—0—0
„ கருணாகரன்	1—0—0
„ ஜி. கிருஷ்ணமூர்த்தி	1—0—0
„ பி பி நடராசன்	1—0—0
„ குரு அனுசாமி	1—0 -0
„ எஸ் காசிம்	1—0—0
„ பி ராமன்குப்தா	1—0—0
„ டாக்டர் நாராயணசாமி	1—0—0
„ ஏ. என். அர்த்தனாரி	1—0—0
„ முருகேசம்	1—0 -0
„ தம்பு, சத்தியசீலபம், மகமத் யூசுப், அப்துல்ரசூப், இருதனுதாபிசன், பார்த்தசாரதி, அப்துல்காதர், நஞ்சையன், கொழுந்தைவேலு, பக்கீரம், பழனியப்பன், இளங்கோவன் முதலியோர்	4-15—0
உடுமலை கலைராஜ் வாசகசாலை செயலாளர்	1—0—0
வெள்ளனூர் தி. மு. கழகம்	20—0—0
புஞ்சைத்தம்பூர் லைகுமகமத், இருஅன்பர்கள், பெரியசாமி, குமாரசாமி, இப்ராகிம, காசிமுத்து ஆகியோர்	6—0—0
காங்கேயம் தி. மு. கழகம்	15—0—0
கொட்டகுளம் தி மு.க. அனுதாபிகள்	30—0—0
திருத்துறைப்பூண்டி தல்லார தி. மு. கழகம்	3—4—0
புதுவயல் எஸ். அல்லாபிச்சை	1—0—0
„ வீரப்பன்	1—0—0
„ எம். திராவிடமணி	1—0—0
„ சம்பந்தம்	1—0—0
„ முனுசாமி	1—0—0
„ என் கே. கிருஷ்ணன்	1—0—0
„ சின்னையா காதர்மைதீன், வெசாமி, அப்துல்லா, சின்னையா, சிதம்பரம், செவத்தையன் ஆகியோர்	3—0—0
பட்டாபிராம் தி. மு. கழகம் கே. எஸ். ராமதாஸ் மூலம் :—	10—1—0
சென்னை-1 செல்வஅரசு	1—0—0
„ என். பத்மநாபன்	2—0—0
„ எஸ் இருசப்பன்	2—0—0
„ பாண்டியன்	1—0—0
„ கே. என. ராசன்	1—0—0
„ ஸ்ரீமகள் புத்தகக் கம்பெனியார்	100—0—0
வேலூர் சிவி ஸர்ட்ஸ் சர்வீஸ் டி. எஸ். மணி, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி மூலம்	10—0—0
சென்னை எழும்பூரில் 29—11—53-ந் தேதி நடந்த கருணாநிதி வரவேற்புக் கூட்டத்திலும், 30—11—53-ந்தேதி கடற்கரையில் நடந்த வரவேற்புக் கூட்டத்திலும், உண்டியல் மூலம் வசூலானது, தோழர் கே. எம். கண்ணபிரான் மூலம்	255—0—1
பாப்பநாய்க்கன்பாளையம் அ. ந. செல்லையா	1—0—0
விருதுநகர் எம். ராமசாமி	2—0—0
சென்னை நல்லதம்பி குழுவினர்	12—0—0
சென்னை மத்திய அரசாங்க அலுவலக ஊழியர்கள், சென்னை	26—0—0
பொள்ளாச்சி மா. துயமணி	1—0—0
ராமநாயக்கன்பட்டி தி. மு கழகம்	6—0—0
சென்டங்காடு தி. மு. கழகம்	5—0 -0
ஏரமடை தி மு. கழகம்	6—0—0
முகவிவரக்கம் செ. சுந்தரமூர்த்தி	1—2—6
„ ஆ கோவிந்தன்	1—1—6
„ எம் கன்னியப்பன்	1—0—0
„ சொக்கலிங்கம்	1—4—0
„ சண்முகம், பலராமன், கோவிந்தராசு ஆகியோர்	1—4—0
„ கே. கிருஷ்ணன்	1—0—0
குலூர் அனுதாபி ஒருவர்	1—0—0
புதுக்கோட்டை இரா. நடராசன்	2—0—0
„ சா. தங்கையா	2—0—0
„ கே. கோவிந்தசாமி	1—0—0
ஈரோடு எம். எம் இப்ராகிம்	5—0—0
ஒரத்தூர்—பாதூர் ஆர். அருணாசலம்	5—0—0
மேட்டுப்பாளையம் (திருச்சி தி. மு கழகம்	10—0—0
பொள்ளாச்சி எம். துயமணி	1—0—0
மேட்டூர் அண்ணா குப்புசாமி	1—0—0
„ எலிசபெத்	1—0—0
„ பத்மா-வேணு, டி. ஏ ஆர். சாமி	1—8—0
பொட்டல் பி. வைரமணி	1—0 – 0
„ பி. கே. ராமநாராயணன்	1—0—0
புதியம்புத்தூர் பெ. துரைசாமி	1—0—0
„ மு அரைப்பாண்டியன்	1—0—0
„ ராசு, துரைபாண்டியன், அய்யாதுரை, அற்புதராஜ், முருகப்பன், பலவேசமுத்து, அய்யாதுரை, இசக்கிமுத்து, தங்கவேல், ரங்கசாமி, அனந்தப்பன், மாரியப்பன் சிததிரை, மணி, தங்கையா, சண்முகம், அபிராமம், செல்லதுரை, அரைப்பாண்டியன், தங்கராஜ் முதலியோர்	10—0—0
ராசப்பையன் சாவடி மருதையன், ரத்தினசாமி, துரைராஜ், கண்ணையன், நாதன், வீரையன, சக்கரை, கோவிந்தசாமி, சின்னசாமி, வில்வநாதன், வெங்கடாசலம், நடராசன், அந்தோணி, சேவு, ஜெகநாதன, மஞ்சான், காதர்மைதீன, சந்திரசேகரன், முத்து, குமாரசாமி, பட்டாணி, ராமசாமி, நாகராசன், ராசகோபால் ஆகியோர்	6-11—0
ஒட்டிமேடு தி. மு கழகம்	5—0—0
சென்னை—வைத்ய பாலகிருஷ்ணன்	2—0—0
பாளையங்கோட்டை சரோஜினி	2—0—0
காரைக்கால் தோழர் ஒருவர்	1—0—0
மாரண்ட அள்ளி தி. மு கழகம்	10—0—0
ஆனையாம்பட்டி தி. மு. கழகம்	7—0—0
கட்டையாபுரம் மு. சக்கரா	1—0.—0
	6363—1—8

கோவையில்

6—12—53 ஞாயிறு மாலை 6 மணிக்கு, சிதம்பரம் பூங்காவில், தோழர்கள் அண்ணாதுரை, ஈ வி கே. சம்பத் பேசுவார்கள். இரவு. நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் 'ஜமீன் மாளிகை' நாடகத்தில் அண்ணாவிடம் தூத்துக்குடி நிதி அளிக்கப்படும்.

கரந்தை: தஞ்சை தி. மு. க. துவக்க விழா

6—12—53 ஞாயிறு காலை 9 மணிக்கு

திறப்பாளர் : மு. கருணாநிதி

பேச்சாளர்கள் :

கரந்தை கணேசன்

டி. கே. கோவிந்தராசன், எம். சி

தூத்துக்குடி நாள்

6—12—53 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில், காஞ்சி மணிமொழியார் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் சி. பி. சிற்றரசு, காஞ்சி கல்யாணசுந்தரம், டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ் ராசேந்திரன், எம். என் கிருஷ்ணன் ஆகியோர் பேசுவர்.

நுழைவுக் கட்டணம் அணா 4

சென்னை தி. மு. கழக 2-வது மாநாடு

வரவேற்புக் குழு அங்கத்தினர்கள் கூட்டம்.

"சென்னை ரேப்பியர் பார்க்கில் நடைபெற்ற மேற்படி மாநாட்டின் வரவேற்புக் குழு அங்கத்தினர்களின் கூட்டம் 6 12-53 ஞாயிறு காலை 8-30 மணிக்கு, இராயபுரம் 'அறிவகத்'தில் நடைபெறும். மாநாட்டின் வரவு—செலவு கணக்கு பரிசீலனை செய்யவேண்டி இருப்பதால், அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது வரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று தோழர்கள் ஏ. ஆர். சேஷாசலம், வ. செயசந்திரன் அறிவிக்கின்றனர்.

இன்னிசை நாட்டிய விருந்து

முத்தமிழ் கலா மன்ற வளர்ச்சிக்காக 6—12—53 மாலை 5 மணிக்கு சென்னை அண்ணாமலை மன்றத்தில் இன்னிசை நாட்டிய விருந்து நடைபெறும். பிரபல பின்னணி பாடகர் எ. எம் ராஜா இசையுடன் நாட்டியக் கச்சேரி நடைபெறும்.

'அம்பலம்' துவக்கவிழா

6—12—53 மாலை, பேரணாம்பட்டு 'அம்பலம்' அலுவலகத்தில், 'அம்பலம்' அறிவிதழ் துவக்க விழா நடைபெறும். தோழர் க. அப்பாதுரை, எம்.ஏ எல். டி., அவர்கள் தலைமையில், தோழியர் அலமேலு அப்பாதுரை, புலவர் மணி எழிலன் மற்றும் பலர் பேசுவர்.

இலங்கைப் பிரதமர் கோரிக்கை

கொழும்பு, டிச. 4—

"இந்திய வியாபாரிகளாகிய உங்களுக்கு நியாயம் கிடைக்கும்; அதையே உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கிறோம்"

என்று, இலங்கை பிரதமர் சர். ஜான் கொத்தலவாலா இந்திய வர்த்தக சபையினர் அளித்த விருந்தில் பேசுகையில் கூறினார்

"உங்கள் வியாபாரத்தில் சிங்களவர்களையும் சேர்த்துக் கொண்டு, அவர்களுக்குத் தக்க பயிற்சியை அளியுங்கள்; எங்கள் வாழ்க்கைத்தரத்தை நிலைநிறுத்தச் செய்ய உதவுங்கள்."

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙

திருக்குறள் வகுப்பு

சென்னை, புரசை, கங்காதீசரன் தெரு, நகராண்மைக் கழக ஆண் பள்ளியில்

6-12-53 ஞாயிறு காலை 9 மணிக்கு

பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏ.,

புலவர் ஏ. நே. வேலன்

வகுப்பு நடத்துவர் அனைவரும் வருக.

ஒவ்வொரு ஞாயிறு காலையும் வகுப்பு நிகழும்.

குறள் நெறி கழகத்தார்.

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙

மதுரை தோழர்கள் வழக்கு

மதுரை, டிச. 3—

தி. மு. கழகத்தினர் மீதும், இளைஞர் காங்கிரஸ்காரர்கள் மீதும் போலீசார் ஜாமீன் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

தி. மு கழகத்தினர் மீது தொடரப்பட்ட வழக்கு இன்று டவுன் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. பி. எஸ். தங்கமணி முன்பு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது இவ்வழக்கு பற்றிய தகவல்கள் சேகரிக்க வேண்டியிருப்பதாலும், நகல்கள் எடுக்கவேண்டியிருப்பதாலும் விசாரணையைத் தள்ளி வைக்க வேண்டுமென தோழர்கள் சார்பில் வழக்கறிஞர் தர்மராஜ் சந்தோஷம் கேட்டுக்கொண்டார்.

அதன் காரணமாக மாஜிஸ்திரேட் வழக்கு விசாரணையை இம் மாதம் 18-ந் தேதிக்குத் தள்ளி வைத்தார்.

'தினத் தந்தி' ஆசிரியர் மீது வழக்கு

சென்னை, டிச 4—

மதுவிலக்கு அமைச்சர் ஜோதி வெங்கடாசலம், 'தினத் தந்தி' ஆசிரியர்-பிரசுரகர்த்தர் பி ராமரத்தினம் ஆகியோர் மீது கோர்ட் அவமதிப்பு சட்ட 3-வது பிரிவின் கீழ், என். இராமரத்னம் கொண்டுவந்த மனு இன்று உயர் நீதி மன்றத்தில் பரிசீலனைக்கு வந்தது.

அமைச்சர், அப்பத்திரிகையின் நிருபருக்கு மதுவிலக்கு சம்பந்தமாக அளித்த பேட்டி நவ 24-ந் தேதி பத்திரிகையில பிரசுரிக்கப்பட்டதாகவும், அது கோர்ட்டை அவமதிக்கும் விஷயமென்றும் மனுதார் குறிப்பிட்டிருந்தார்.

மதுவிலக்கு மந்திரி மீதுள்ள புகாரை ஏற்க முடியாதென்றும், அவரது பேட்டி, கோர்ட்டை அவமதிக்கக் கூடியதல்ல வென்றும், நீதிபதிகள் திரு. சத்திய நாராயணாவும், திரு பி. ராசகோபாலனும் தீர்ப்பளித்தனர். ஆனால் 'தினத் தந்தி' ஆசிரியர் பி ராமரத்தினம் சம்பந்தமாக மனுவில் கூறப்பட்டுள்ள புகாரை டிச. 14-ந தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

மந்திரி பேட்டி பற்றிய தஸ்தாவேஜியை முதல் எதிரி தாக்கல் செய்ய வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர்.

சபுர்தாலா சப்-ஜெயிலில் உள்ள கைதிகள் ஒன்று கூடிக்கொண்டு, அங்கு அவர்களைப் பார்வையிட வந்த பெப்சு சர்க்கார் உயர்தர சிறை அதிகாரிக்கு வரவேற்பு இதழ் வாசித்தளித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகத் அச்சக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அறிவின் அச்சகத்தில் அச்சிடப்பெற்று (3ஏ, ஜார்ஜ் நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இ. என். அண்ணாத்துரை, எம். ஏ.